தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## பி.டி. கத்தரிக்காய்க்கு தடை இல்லை: ஜெய்ராம் ரமேஷ்

First Published : 18 Feb 2010 03:56:36 AM IST

சென்னை, பிப்.17: ""மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய்க்கு முழுமையான தடை விதிக்கப்படவில்லை. ஒருமித்தக் கருத்து ஏற்பட்டால் மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய் பயிரிட அனுமதிக்கப்படும்'' என்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் பல்லுயிர்ப் பெருக்கம், உணவு பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் குறித்த சர்வதேச மாநாடு திங்கள்கிழமை (பிப். 15) தொடங்கி 3 நாள்கள் சென்னை தரமணியில் நடைபெற்றது.

புதன்கிழமை நடைபெற்ற நிறைவு விழாவில் கலந்து கொண்ட மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் செய்தியாளர்களிடம் கூறியது:

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய்க்கு முழுமையான தடை விதிக்கப்படவில்லை. மாநில முதல்வர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், விஞ்ஞானிகள், பொதுமக்கள் ஆகியோரிடம் ஒருமித்தக் கருத்து ஏற்பட்டால் மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய் பயிரிட அனுமதிக்கப்படும்.

இது குறித்து அனைத்துத் தரப்பிலும் விவாதிக்கப்படும். அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் மரபணு மாற்றப்பட்ட உணவுப் பொருள்களை அனுமதிப்பது குறித்து விவாதிக்கப்படும்.

கத்தரிக்காய் மட்டுமல்ல மரபணு மாற்றப்பட்ட மற்ற உணவுப் பொருள்களை அனுமதிப்பது குறித்து விவாதம் நடத்தப்படும். ஒருமித்தக் கருத்து அடிப்படையில் முடிவு எடுக்கப்படும். பெரும்பாலான விஞ்ஞானிகள் மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய் உள்ளிட்ட உணவுப் பயிர்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

குஜராத்தில் புலிகள் மற்றும் சிங்கங்களை பாதுகாக்க வனவிலங்கு சரணாலயம் அமைக்க வேண்டும் என்று அம்மாநில முதல்வர் நரேந்திர மோடி கோரிக்கை விடுத்துள்ளார்.

குஜராத்தில் மட்டுமல்ல பாஜக ஆட்சி நடக்கும் மத்தியப் பிரதேச மாநிலத்திலும் வனவிலங்கு சரணாலயம் அமைக்க மத்திய அரசு தயாராக உள்ளது. இந்த விஷயத்தில் அரசியல் வேறுபாடுகள் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசைப் பொறுத்தவரை காடுகளை அழித்து நிறைவேற்றப்படும் 95 சதவீத மின் உற்பத்தி திட்டங்கள் உள்ளிட்ட திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. ஏற்கெனவே அளிக்கப்பட்ட அனுமதியும் சில இடங்களில் ரத்து செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் முதுமலை, கேரளத்தில் அதிரப்பள்ளியில் மின் உறுபத்தி திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

1972}ல் கொண்டுவரப்பட்ட வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தை திருத்துவதற்கான புதிய மசோதா வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும். அதில் வனவிலங்குகளைப் பாதுகாக்க கடுமையான விதிமுறைகள் இருக்கும்.

சுற்றுச் சூழல் விஞ்ஞானி பச்செளரி இமயமலை உருகுவது பற்றி தெரிவித்த கருத்து முடிந்தபோன கதை. ஆனால் இமயமலை உருகி வருவது உண்மைதான். அதனைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார் ஜெய்ராம் ரமேஷ்.

**முன்னதாக மாநாட்டில் அவர் பேசியது:**

பல்லுயிர்ப் பெருக்கத்தை பாதுகாக்க மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இது குறித்து மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கேரளம், கர்நாடகம், மத்தியப்பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் பல்லுயிர்ப் பெருக்கத்தை பாதுகாக்க பஞ்சாயத்து அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதனை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும்.
பல்லுயிர்ப் பரவல் குறித்து 2012}ல் இந்தியாவில் மிகப்பெரிய மாநாடு நடத்தப்படும். ரூ. 20 கோடியில் டேராடூனில் மரபணு காடுகள் குறித்த தேசிய அமைப்பு உருவாக்கப்படும் என்றார்.
வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் அஜய் பரிடா, நைரோபியில் உள்ள ஐ.நா. சுற்றுச்சூழல் அமைப்பின் விஞ்ஞானி ஏஞ்சலா கிராபர் உள்பட 23 நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மாநாட்டில் பங்கேற்றனர்.

மாநாட்டின் நிறைவில் பல்லுயிர்ப் பரவல், உணவுப் பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் குறித்த கருத்துக்கள் "சென்னை பிரகடனம்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

**உயர்விளைச்சல் தரும் பிகேஎம்- 1 ரக மிளகாய் சாகுபடி**

First Published : 18 Feb 2010 01:57:02 AM IST

Last Updated : 18 Feb 2010 09:01:49 AM IST

தூத்துக்குடி, பிப். 17: தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டாரத்தில் உயர் விளைச்சல் தரும் பி.கே.எம். 1 ரக மிளகாய் சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டு, நல்ல பலன் கொடுக்க தொடங்கியுள்ளது.
விளாத்திகுளம் வட்டார பகுதிகளில் காய்கறி மற்றும் மிளகாய் சாகுபடியையும், உற்பத்தி திறனையும் அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், விவசாயிகளின் தேவை கருதியும் விவசாயிகளுக்கு யு.எஸ். 341 என்ற வீரிய ஒட்டு ரக மிளகாய், பி.கே.எம். 1 உயர் விளைச்சல் மிளகாய், யு.எஸ். 7109 வீரிய ஒட்டுரக வெண்டை உள்ளிட்ட காய்கறி விதைகள் தோட்டக்கலை துறை மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் கடந்த செப்டம்பர் மாதம் முதல் விநியோகம் செய்யப்பட்டது.
பி.கே.எம். உயர் விளைச்சல் மிளகாய் சாகுபடி செய்துள்ள பகுதிகளில் தற்போது அறுவடை தொடங்கியுள்ளது. விளாத்திகுளம் அருகேயுள்ள ஆ. குமாரபுரம் கிராமத்தில் பி.கே.எம். மிளகாய் ரகம் சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களில் வற்றல் அறுவடையை விளாத்திகுளம் வட்டார தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் பார்வையிட்டார். பின்னர் அவர் கூறியதாவது:
பெரியகுளம் தோட்டகலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 5 கிலோ பி.கே.எம். 1 என்ற உயர்விளைச்சல் தரும் மிளகாய் விதைகள் பெறப்பட்டு, விளாத்திகுளம் பகுதியில் 7 முன்னோடி விவசாயிகளுக்கு ரக அறிமுக நோக்கத்துடன் 50 சதவீத மானிய விலையில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.
அதன் தொடர்ச்சியாக பயிó்ர் சாகுபடி தொழில்நுட்ப விளக்கங்களும் அவ்வப்போது தோட்டக்கலை துறை களப்பணியாலர்கள் மூலம் வழங்கப்பட்டது.
பி.கே.எம். 1 ரக மிளகாயானது பெரியகுளத்தில் உள்ள தோட்டகலை கல்லூரியில் எண்: 1797 ல கோ. 1 என்ற கரு ஒட்டின் நான்காவது தலைமுறை சந்ததிகளில் இருந்து தேர்வு செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட ரகமாகும்.
இந்த ரகம் நன்கு பருத்த நீண்ட காய்களை கொண்டது. பழங்கள் அடர் சிவப்பு நிறத்துடன் இருக்கும். எக்டேருக்கு 3000 முதல் 3200 கிலோ வரை வற்றல் மகசூல் தரவல்லது.
இதன் வயது 180 நாள்களாகும். விளாத்திகுளம் பகுதிக்கு ஏற்ற ரகமாக இது இருக்கும் என்றார் அவர்.
ஆ. குமாரபுரம் கிராமத்தில் பி.கே.எம். 1 மிளகாய் விதையை மானிய விலையில் பெற்று 1.25 ஏக்கரில் பயிரிட்டுள்ள விவசாயி த. ரத்தினம்மாள் என்ற விவசாயி கூறுகையில், தற்போது வற்றல் முதல் அறுவடை தொடங்கியுள்ளது. முதல் அறுவடையிலேயே 100 கிலோ மகசூல் கிடைத்துள்ளது. காய்கள் பிடித்துள்ளதை பார்க்கையில் இன்னும் 1200 முதல் 1400 கிலோ வற்றல் மசூல் கிடைக்கும் என நம்புகிறோம் என்றார் அவர்.

## கரூர் உழவர் சந்தையில் வேளாண் இணை இயக்குநர் ஆய்வு

First Published : 17 Feb 2010 06:47:39 AM IST

கரூர், பிப். 16: கரூர் உழவர் சந்தையில் வேளாண் இணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ச. வேலாயுதம் திங்கள்கிழமை ஆய்வு நடத்தினார்.

உழவர் சந்தையின் சிறப்பு அம்சங்கள், சந்தையின் செயல்பாடுகள், தேவைகள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து சந்தையில் காய்கறிகளை விற்பனை

செய்யும் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். காய்கறி வாங்க வந்திருந்த பொதுமக்களிடம் சந்தையில் விற்பனை செய்யப்படும் விலை, தரம் குறித்து வேளாண் இணை இயக்குநர் கேட்டறிந்தார்.

அதேபோல, சுய உதவிக் குழுவினரால் விற்பனை செய்யப்படும் ஆங்கில காய்கறிகளின் விற்பனையையும் வேலாயுதம் ஆய்வு செய்தார். அப்போது, கரூர் உழவர் சந்தையில் நாள்தோறும் 23.5 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்படுகிறது. 184 விவசாயிகள் 2.80 லட்சம் ரூபாய் மதிப்புள்ள காய்கறிகளை விற்பனை செய்வதாகவும், சுமார் 4700 நுகர்வோர் வந்து செல்வதாகவும் மாவட்ட வேளாண் துணை இயக்குநர் மா. முத்துசாமி தெரிவித்தார்.

ஆய்வின்போது வேளாண் அலுவலர் ரா. ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ம. மகாவிஷ்ணன், கு. கொளஞ்சி ஆகியோர் உடனிருந்தனர்.

## நெல் கொள்முதல் இலக்கு எட்டப்படுமா?

எஸ். கல்யாணசுந்தரம்

First Published : 18 Feb 2010 05:01:12 AM IST



திருவாரூர், பிப். 17: காவிரி டெல்டா மாவட்டங்களில் தனியார் நெல் கொள்முதல் அதிகரித்துள்ளதால், நிகழாண்டில் அரசு நிர்ணயித்துள்ள நெல் கொள்முதல் இலக்கு எட்டப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் சம்பா, தாளடி நெல் அறுவடைப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

தஞ்சை மாவட்டத்தில் 1,36,000 ஹெக்டேரும், திருவாரூர் மாவட்டத்தில் 1,45,940 ஹெக்டேரும், நாகை மாவட்டத்தில் 1,31,000 ஹெக்டேரும் என மொத்தம் 4,12,940 ஹெக்டேரில் சம்பா, தாளடி நெல் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. இதில் இதுவரை தஞ்சை மாவட்டத்தில் 54,000 ஹெக்டேரும், திருவாரூர் மாவட்டத்தில் 1,18,000 ஹெக்டேரும், நாகை மாவட்டத்தில் 92,000 ஹெக்டேரும் அறுவடைப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் அதிகபட்சமாக ஹெக்டேருக்கு 6,500 கிலோவும், திருவாரூர் மாவட்டத்தில் 7,370 கிலோவும், நாகை மாவட்டத்தில் ஹெக்டேருக்கு 9,648 கிலோவும் மகசூல் கிடைத்துள்ளது.

இந்நிலையில், தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 1,200-க்கும் மேற்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் நடைபெற்று வருகிறது. இங்கு நெல் பொது ரகம் குவிண்டால் ஒன்று ரூ.1,050-க்கும், சன்ன ரகம் குவிண்டால் ஒன்று ரூ.1,100-க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. நிகழாண்டில் தமிழகம்

முழுவதும் 16 லட்சம் டன்னும், இதில் டெல்டா மாவட்டங்களில் மட்டும் 13 லட்சம் டன்னும் நெல் கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

தனியார் வியாபாரிகளை நாடக் காரணம்: நெல் கொள்முதலில் ஈரப்பத அளவை உயர்த்தாதது, தூற்றித் தர வேண்டுமென கட்டாயப்படுத்துவது, குவிண்டாலுக்கு ரூ. 25 முதல் ரூ. 40 வரை கையூட்டு கேட்பது, நெல்லை வயலிலிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு செல்வதில் உள்ள வண்டிச் செலவு, ஆள் கூலி மற்றும், அங்கு கொள்முதல் செய்யும் வரை காத்திருப்பது உள்ளிட்டவற்றால் ஏற்படும் காலதாமதம் ஆகியவற்றால் விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்பனை செய்ய விரும்பாமல், தனியாரிடம் விற்பனை செய்யும் நிலை இந்த ஆண்டு அதிகரித்துள்ளது.

அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேடுகளைத் தடுத்து, கட்டுப்படியான விலை அளித்து விவசாயிகளுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டால் மட்டுமே இனி வரும் காலங்களில் அரசு தனது கொள்முதல் இலக்கை எட்ட முடியும். நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்களை அரசு விரிவுபடுத்த வேண்டும் என்கிறார் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலர் ஆறுபாதி ப. கல்யாணம்.

மேலும், நிகழாண்டில் டெல்டா மாவட்டங்களில் சன்ன ரக நெல் ரகங்களான பாப்பட்லா, ஆடுதுறை 39, கோ 43, கே.ஆர்.எச்.2 உள்ளிட்ட ரகங்களை ஏறத்தாழ 30 சதவீதத்துக்கு மேல் விவசாயிகள் சாகுபடி செய்திருந்தனர். இந்த ரக அரிசி வெளிச் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதால், வியாபாரிகளும் அரசு நிர்ணயித்துள்ள விலையைவிட நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.100 முதல் ரூ. 200 வரை கூடுதலாக அளிக்கின்றனர். தனியார் வியாபாரிகள் விவசாயிகளின் வயல்களுக்கே சென்று கொள்முதல் செய்கின்றனர். இதன் காரணமாகவும் அரசு தனது கொள்முதல் இலக்கை எட்ட இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, அரசு தனது கொள்முதல் இலக்கை எட்ட நேரடி நெல் கொள்முதல் நிலைய முறைகேடுகளை முழுமையாகக் களைய வேண்டும். தட்ப வெட்ப நிலை மற்றும் இயற்கைச் சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பொருத்து விலை நிர்ணயம், கட்டுப்பாடு, ஊக்கத் தொகை ஆகியவற்றை நிர்ணயித்து கொள்முதல் செய்ய வேண்டும் என்கின்றனர் விவசாயிகள்.

தினமலர்

### திருமானூர் பகுதியில் சம்பா அறுவடை தீவிரம்

திருமானூர்:திருமானூர் பகுதியில் சம்பா நெல் அறுவடை பணிகள் முழு வீச்சில் நடந்து வருகிறது.அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றிய பகுதி தஞ்சை மாவட்ட டெல்டா பகுதிகளை போல விவசாய பகுதியாகும். புள்ளம்பாடி வாய்க்கால், சுக்கிரன் ஏரி, நந்திஆறு வாய்க்கால் ஆகியவற்றின் மூலம் இப்பகுதியை சேர்ந்த ஏராளமான வயல்கள் பாசன வசதி பெறுகின்றன. மேலும் மின் மோட்டார், ஆயில் மோட்டார் கிணற்றுபாசனம் மூலம் ஏராளமான வயல்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த வகையில் இந்த ஆண்டு 7 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் 4 ஆயிரத்து 500 எக்டேர் சம்பா சாகுபடியாகும். 3 ஆயிரம் எக்டேர் தாளடி சாகுபடியாகும். மேலும் 2 ஆயிரம் எக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது இந்த பணிகள் நிறைவடைந்து சம்பா நெல் பயிர்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. கடந்த சில தினங்களாக இப்பகுதியில் சம்பா நெல் சாகுபடி பணிகள் மிக தீவிரமாக நடந்து வருகிறது. நெல் அறுவடை பணிக்கு ஆட்கள் பற்றாக்குறை காணப்படுவதால் நெல்

அறுவடை இயந்திரங்கள் மூலமும் அறுவடை பணிகள் முழு வீச்சில் நடந்து வருகிறது. ஒரு ஏக்கருக்கு 1,800 கிலோ நெல் விளைச்சல் கிடைப்பதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## காரமடை விவசாயிகளுக்கு உழவர் வயல்வெளி பயிற்சி

மேட்டுப்பாளையம் : உழவர் வயல்வெளி பயிற்சி, தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் சார்பில், காரமடை, தாயனூர் கிராமத்தில் நடந்தது.

காரமடை வேளாண் உதவி இயக்குனர் பானுமதி தலைமை வகித்து பேசியதாவது: தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் பயறு வகை விதைகள், நுண்ணூட்ட சத்துகள், ஜிப்சம், வேளாண் கருவிகள், பயிர் பாதுகாப்பு கருவிகள், தார்பாலின், தானிய சேமிப்பு குதிர்கள், பவர்டில்லர் வினியோகம் செய்யப்படுகின்றன. உழவர் வயல்வெளி பயிற்சி பள்ளியில், பயறுவகை சாகுபடி தொழில்நுட்பங்கள், பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். இவ்வாறு, பானுமதி பேசினார்.

வயலில் இனக்கவர்ச்சி பொறி மூலம் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணித்து கட்டுப்படுத்துவது குறித்து, வேளாண் அலுவலர் சுப்புலட்சுமி, செயல் விளக்கம் காண்பித்தார். விதை நேர்த்தி மூலம் பூச்சி மற்றும் பூஞ்சான நோய்களை கட்டுப்படுத்துவது குறித்து, துணை வேளாண் அலுவலர் திப்பையன் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காண்பித்தார். உதவி வேளாண் அலுவலர்கள் செல்வக் குமார், ராஜேஸ்வரி ஆகியோர் பயறு வகை பயிர்களுக்கு "டிஏபி' தெளிப்பது குறித்து செயல் விளக்கம் அளித்தனர். பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் பங் கேற்றனர்.

## மல்லி, மிளகாய் விலை வீழ்ச்சி

பண்ருட்டி : உற்பத்தி வரத்து அதிகரிப்பால் மல்லி, மிளகாய் விலை குறைந்து வரு கிறது.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், ஆந்திரா மாநிலங்களில் தற்போது மல்லி சீசன் துவங்கியுள்ளது. இதனால் ராஜஸ்தானில் 2,000, மத்தியபிரதேசத்தில் 4,500, ஆந்திராவில் 2,500 , தமிழகத்தில் 300 மூட்டை மல்லி தினசரி விற்பனைக்கு வருகிறது. மல்லி வரத்து அதிகரித்துள்ளதால் விலை படிப் படியாக குறைந்து வருகிறது. மல்லி விலை குறைந்து வருகிறது.

புதிய உற்பத்தி மல்லி வரவு காரணமாக கடந்த டிசம்பர் மாதம் 2,200 ரூபாயிற்கு விற்ற ஒரு மூட்டை (40 கிலோ) மல்லி தற்போது 1,700 ரூபாயாக குறைந்துள்ளது.

இதனால் சில்லரை விற்பனையில் ஒரு கிலோ 55ல் இருந்து 45 ரூபாயாக குறைந்துள்ளது. அதேபோல் ஆந்திர மாநிலம் குண்டூர், தமிழ் நாட்டில் குளத்தூர் உள் ளிட்ட பகுதியில் இருந்து புதிய வற்றல் மிளகாய் வரத்து துவுங்கியுள்ளது. இதனால் 100 கிலோ "ஏசி பெஸ்ட்" ரக மிளகாய் 5,500 ரூபாயாகவும், "எண்டோ ஏசி' ரக மிளகாய் 4,700 ரூபாயாக விலை குறைந்துள் ளது. இதனால் சில்லரை விற்பனையில் மிளகாய் ஒரு கிலோ 70 ரூபாயில் இருந்து தற்போது 60 ஆக குறைந் துள்ளது.

## நெல் அறுவடைக்கு பின் தொழில் நுட்பம் வேளாண் துறை அறிவுரை

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் நெல் அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய தொழில் நுட்பம் குறித்து வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது. இது குறித்து வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) லட்சுமிராஜ், வேளாண் அலுவலர் (வேளாண் வணிகள்) தாம்சன் ஆகியோர் வெளியிட்ட அறிக்கை:

தர்மபுரி மாவட்டத்தில் நீர் வள, நில வள திட்டப்பகுதியான கம்பைநல்லூர் உபவடி நில பகுதியில் நெல் தற்சமயம் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. குறிப்பாக அளே தர்மபுரி ராமக்காள் ஏரி பாசன பகுதியிலும், சோகத்தூர் ஏரி பாசன பகுதியிலும், அதியமான்கோட்டை ஏரி, கிருஷ்ணாபுரம் ஏரி பாசன பகுதியில் நெல் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

நீர்வள, நிலவள திட்டப் பகுதி விவசாயிகள் நெல் அறுவடைக்கு பின் தொழில் நுட்பங்களை கடைப்பிடிப்பது அவசியமாகும். நெல் மணிகள் கூடுதல் விலை பெறுவது அதில் உள்ள முழு அரிசியின் அடிப்படையில் தான் உள்ளது. நெல் மணிகள் அரவையில் 62 சதம் முழு அரிசி கிடைத்திட அறுவடைக்கு பின் நேர்த்தி முறைகளை கடைப்பிடிக்க வேண்டும். நெல் ரகங்களில் வயதுக்கு ஏற்றவாறு பயிரின் அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ள வேண்டும். நெல் கதிரின் மணிகள் 80 சதம் மஞ்சள் நிறமாக மாறி இருந்தாலே அறுவடையை மேற்கொள்ளலாம். இதனால், மணிகள் உதிர்வது தடுக்கப்படும்.

அறுவடையின் போது 19 முதல் 23 சதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். முதிர்ந்த நெல் மணிகளின் அரிசி கடுமையானதாகவும் உறுதியாகவும் இருக்கும். அறுவடை செய்த நெல்லை நன்றாக சுத்தம் செய்ய வேண்டும். அதிக சூரிய வெப்பத்தில் நெல்லை காய வைக்க கூடாது. காய வைத்த நெல்லின் ஈரப்பதம்ம 12 சதத்துக்குள் இருக்க வேண்டும். அதிக ஈரப்பதம் உள்ள நெல் மணிகளை சேமித்து வைத்தால் பூஞ்சான வித்துக்கள் பரவி நெல்லின் தரம் பாதிக்கப்படும். நெல்லை சுத்தமான கோணிப் பைகளில் நிரப்பி தரையின் மீது மரச்சட்டங்கள் அல்லது காய்ந்த வைக்கோல் பரப்பி அதன் மேல் மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும்.

நெல் மூட்டைகளை சுவரில் இருந்து ஒரு அடி இடைவெளி விட்டு அடுக்கி வைத்தால், சுவற்றின் ஈரப்பதம் நெல்மணிகளை தாக்காது. சேமித்து வைத்துள்ள நெல்லில் அந்துப்பூச்சி தாக்காமல் இருக்க மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 10 மில்லி மருந்து என்ற அளவில் கலந்து தரைப்பகுதி மற்றும் மூட்டைகளின் மீது தெளிக்க வேண்டும். விற்பனைக்கு நெல்லை கொண்டு வரும் போது, ரகங்கள் வாரியாக கொண்டு வர வேண்டும்.

பூச்சிகள், பூஞ்சாணங்கள் தாக்கப்பட்ட நெல் மற்றும் ஈரப்பதத்தால் கெட்டுப்போன நெல்லை தனியாக பிரித்து விட வேண்டும். வணிக முறை தரம் பிரிப்பு முறையில் நெல் மணிகள் நான்கு தரங்களாக பிரிக்கப்படுகிறது. நெல் அறுவடைக்கு பின் உள்ள தொழில் நுட்பங்களை கடைப்பிடிப்பதன் மூலம் நெல் விற்பனையின் போது, நல்ல விலை கிடைக்கும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**புதிய அரிசி வரத்தால் விலை சரிவு**

ஈரோடு: புதிய அரிசி வரத்து அதிகரித்துள்ளதால் அரிசி விலை கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை குறைந்துள்ளது. பொதுமக்கள் சிலர் விவசாயிகளிடம் நேரடியாக நெல் கொள்முதல் செய்து அரவை செய்வதால் அரிசி விலை மந்தமாகி விட்டதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஈரோடு சுற்றுவட்டாரத்தில் கொடுமுடி, பெருந்துறை, வெள்ளகோவில், கோபி, அறச்சலூர், ஊத்துக்குளி மொடக்குறிச்சி, காங்கேயம் உள்ளிட்ட பகுதிகளில் 200க்கும் மேற்பட்ட அரிசி ஆலைகள் உள்ளன. அரிசி ஆலை உரிமையாளர்கள் தஞ்சாவூர், ஈரோடு, ஆந்திரா, கர்நாடகா பகுதியில் இருந்து நெல் வாங்கி வருகின்றனர். ஆலைகளில் அரவை செய்து சேலம், திருப்பூர், ஈரோடு மாவட்ட பகுதிகளுக்கு வினியோகம் செய்கின்றனர். சென்றாண்டு இறுதியில் ஆந்திராவில் "லெவி' அமல்படுத்தப்பட்டதால் தமிழகத்துக்கு நெல் வரத்து குறைந்து விட்டது. கர்நாடகா பகுதியில் இருந்து மட்டுமே நெல் வரத்தானது.

நெல் வரத்து குறைவு காரணமாக அனைத்து வகை அரிசியும் மூட்டைக்கு 50 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை உயர்ந்தது. கர்நாடக டீலக்ஸ் 2,600 ரூபாய், எமர்ஜென்சி 1,850 ரூபாய், பி.பி.டி., 2,300 ரூபாய், அதிசய பொன்னி 1,850 ரூபாய், ஏ.டி.டி.,36 ரகம் 1,500 ரூபாய், இட்லி அரிசி 1,450 ரூபாய் என விற்பனையானது.

தற்போது தமிழகம் முழுவதும் நெல் அறுவடை முடிந்து, நெல் அரவை பணி துவங்கியுள்ளதால் ஈரோடு மார்க்கெட்டுக்கு சில வாரங்களாக புது அரிசி வரத்து துவங்கி விட்டது. அரிசி கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை குறைந்துள்ளது. பொதுமக்கள் பலர் விவசாயிகளிடம் நேரடியாக நெல் கொள்முதல் செய்து, அரவை செய்வதால் அரிசி விற்பனை பாதிக்கப்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

விலைவாசி உயர்வால், பொருட்கள் வாங்கும் சக்தி மக்களிடம் குறைந்து விட்டது. ரேஷன் கடையை மக்கள் நம்பி உள்ளனர். ஒரு ரூபாய் அரிசி வாங்குவோர் எண்ணிக்கை அதிகரித்து விட்டதால், அரிசி விற்பனை குறைந்துவிட்டது.

நேற்றைய நிலவரப்படி கர்நாடக டீலக்ஸ் பொன்னி பழையது 75 கிலோ மூட்டை 2,600 ரூபாய், புதியது 2,150 ரூபாய், பி.பி.டி., பழையது 2,200 ரூபாய், புதியது 1,750 ரூபாய், அதிசய பொன்னி பழையது 1,750 ரூபாய், புதியது 1,500 ரூபாய், கோ 36 ரகம் பழையது 1,650 ரூபாய், புதியது 1,500 ரூபாய், இட்லி அரிசி 1,500 ரூபாய், கல்சர் இட்சி அரிசி 1,450 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

அரிசி வியாபாரி ஒருவர் கூறியதாவது: வடமாநிலத்தில் இருந்து நெல் கொள்முதல் செய்வது குறைந்த காரணத்தால் சென்ற டிசம்பர் மாதத்தில் அரிசி விலை பல மடங்கு அதிகரிக்க வேண்டி இருந்தது. தற்போது தமிழகம் முழுவதும் நெல் அறுவடை பணி முடியும் தருவாயில் உள்ளது. அரிசி ஆலை உரிமையாளர்கள் புதிய நெல் வாங்கி வந்து, அரவையைத் துவக்கி விட்டனர். புதிய அரிசியும் மார்க்கெட்டுக்கு வரத்தாகிறது.

புதிய அரிசி வரத்து அதிகரிப்பால் அரிசி விலை கிலோவுக்கு நான்கு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரை குறைந்துள்ளது. விவரம் தெரிந்த மக்கள் சிலர் விவசாயிகளிடம் நேரடியாக நெல் கொள்முதல் செய்து, அரவை செய்கின்றனர்.

இதன் காரணமாக அரிசி விற்பனை குறைய துவங்கி உள்ளது. ரேஷன் அரிசி பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரிப்பாலும் அரிசி விற்பனை பாதிக்கப்பட்டுள்ளது. அரிசி ஆலைகளில் அரிசி தேக்கமடைந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்

### விவசாயிகளுக்குள் ஒருங்கிணைப்பை ஏற்படுத்திய செம்மை நெல் சாகுபடி

மதுரை : மதுரை அங்காடிமங்கலத்தில் "தொகுப்பு வயல்கள்' (கிளஸ்டர்) அமைத்து செம்மை நெல் சாகுபடி செய்த விவசாயிகள் அதிக மகசூல் பெற்றுள்ளனர். விவசாயத் துறையினர் செம்மை நெல் சாகுபடியில் தீவிரம் காட்டி வருகின்றனர். இதையடுத்து மதுரை கிழக்கு யூனியன் அங்காடிமங்கலத்தில் "கிளஸ்டர்கள்' என்னும் தொகுப்பு வயல்கள் உருவாக்கப் பட்டது.
உதவி இயக்குனர் கனகராஜ், உதவி விவசாய அலுவலர் காதர்உசேன் ஏற்பாடுகளை செய்தனர். அங்காடிமங்கலம் பிட்-1 பகுதியில் 25 ஏக்கரும், பிட்-2 பகுதியில் 25 ஏக்கருமாக 50 விவசாயிகள் தலாஒரு ஏக்கரில் நெல் சாகுபடி செய்தனர்.இப்பகுதி கிணற்று பாசன வசதி கொண்டது. கடந்த அக்டோபரில் நெல் நடவானது. சமீபத்தில் நெல் அறுவடை நடந்தது. இதில் அங்காடிமங்கலம் விவசாயிகள் "அமோக' விளைச்சல் பெற்றனர். வழக்கமாக ஒரு ஏக்கரில் 30 மூடை வரை கிடைக்கும். ஆனால் செம்மை நெல் விவசாயிகள் சராசரியாக 40 மூடை பெற்றனர். சிலர் 45 மூடைகள் வரை பெற்றுள்ளனர். சராசரியாக 10 மூடைகளுக்கான குறைந்தபட்ச மதிப்பு 9 ஆயிரத்து 100 ரூபாய்.

இத்துடன் புதிய சாகுபடி முறையால் "சேமிப்பான' நாட்கள், தண்ணீர், உழைப்பு ஆகியவற்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் என மதிப்பிட்டால், ஒரு ஏக்கருக்கு 11 ஆயிரம் ரூபாய் கூடுதலாக கிடைத்துள்ளது. இதனால் அங்காடி மங்கலம் விவசாயிகள் மகிழ்ச்சியில் திளைத்துள்ளனர். அங்காடிமங்கலம் பஞ்., துணைத் தலைவர் ஏ.முகம்மது முஸ்தபா கூறியதாவது:விவசாய அதிகாரிகள் எங்களிடம் கூறியபோது தயங்கிய நாங்கள் பின் சம்மதித்தோம். பி.பி.டி. 5204 ரக கர்நாடக பொன்னி நெல் பயிரிட்டோம். அரசிடம் இருந்து மானியமும் கிடைத்தது. அதிகாரிகளின் ஆலோசனையுடன் சாகுபடி செய்தோம். துவக்கத்தில் சற்று சிரமப்பட்டாலும், அதிக மகசூல் கிடைத்துள்ளது. இதற்காக அதிகளவு செலவும் ஏற்படவில்லை. இதைப் பார்த்த மற்ற விவசாயிகள் அடுத்த முறை எங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என கேட்கின்றனர். கிளஸ்டர் முறையில் தொகுப்பு வயல்களாக பயிரிட்டதால் எங்களுக்குள் ஒருங்கிணைப்பு ஏற்பட்டு, தற்போது புதிய குழுவாக உருவாகியுள்ளோம். வங்கி கடன் பெற்று இயந்திரங்களை வாங்கி பொதுவாக பயன்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் நடக்கின்றன என்றார்.உதவிஇயக்குனர் கூறுகையில், ""கிளஸ்டர் அமைத்து செயல்பட்டதால், நோய், பூச்சி தாக்குதல் ஏற்பட்டால், யாராவது ஒருவர் உடனே எங்களுக்கு தெரியப்படுத்தி அறிவுரை பெற்று செயல்படுகின்றனர். இப்போது அதிக மகசூல் கிடைத்ததால் அக்குழுவினரிடையே ஒற்றுமை உணர்வு மேலோங்கி இருக்கிறது'' என்றார்.

### நாற்று முறையில் வெயிலுக்கு ஏற்ற சின்ன வெங்காயம் அறிமுகம்

அலங்காநல்லூர்:கோடை வெயிலை சமாளிக்கும் வகையில், நாற்று முறை சின்னவெங்காய பயிரினை பெரிய இலந்தைகுளத்தில் அறிமுகம் செய்துள்ளனர். விவசாயிகள் பல்லாரி வெங்காயம் என அழைக்கப்படும் பெரிய வெங்காயம் நாற்று முறையில் நடவு செய்வது வழக்கம். சின்ன வெங்காயத்தினை பதப்படுத்தி ஒற்றை கீற்றாக பிரித்தெடுத்து நடவு செய்வர். இரண்டு வகை வெங்காயத்தையும், மழைக்காலத்தில் செப்டம்பர் மாதம் நடவு செய்து டிசம்பர், ஜனவரி மாதத்தில் பலன் எடுப்பார்கள்.

புதிய முறை அறிமுகம் :

அலங்காநல்லூர் அருகே பெரிய இலந்தை குளத்தில் வேளாண் துறை உதவியுடன் துல்லிய பண்ணை திட்டத்தில் விவசாயிகள் பல்வேறு விவசாயம் செய்கின்றனர். முதன்முறையாக, கோடை வெயிலை சமாளிக்கும் வகையில் சொட்டு நீர் பாசனம் மூலம் நாற்று முறையில் சின்ன வெங்காயம் நடவு செய்ய நாற்றங் கால் அமைத்துள்ளனர். துல்லிய பண்ணை திட்ட தலைவர் தர்மர் கூறியதாவது: ஏக்கருக்கு 400 கிலோ சின்னவெங்காயம் நடவு செய்தால், நான்கு மாதத்தில் ஆறாயிரம் கிலோ வரை கிடைக்கும். நல்ல விலை விற்றால் லாபம். விலை இல்லாத சமயத்தில் பதப்படுத்தி வைத்திருந்து, விலை ஏற்றம் இருக்கும் சமயத்தில் விற்கலாம், என்றார்.

### கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு பருத்தி வரத்து குறைவு: வியாபாரிகள் கடும் அதிருப்தி

ராசிபுரம்: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனைச் சங்கத்திற்கு பருத்தி மூட்டைகள் குறைவாக வந்ததால், ஏலத்தில் பங்கேற்ற வெளிமாவட்ட வியாபாரிகள் பலர் கடும் அதிருப்தியடைந்தனர். ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பருத்தி, மஞ்சள், கடலை உள்ளிட்ட விளைபொருட்களை விற்பனைக்கு கொண்டு வருவர்.

மேற்குறிப்பிட்ட விளைபொருட்களுக்கு குறிப்பிட்ட தினத்தில் ஏலம் நடக்கும். அதன்படி ராசிபுரம் வேளாண் விற்பனைச் சங்கத்துக்கு ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, பட்டணம், சீராப்பள்ளி, வேலம் பாளையம், கதிராநல்லூர், உள்ளிட்ட சுற்று வட்டாரத்தில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி விற்பனைக்கு கொண்டுவரப்பட்டது. அதில் ஆடிப்பட்ட மானாவாரி பருத்தி ரகங்களான ஆர்.சி.எச், மற்றும் டி.சி.எச்., போன்றவை விற்பனைக்கு குவிக்கப்பட்டிருந்தன.

சேலம், திருப்பூர், கோவை அன்னூர் போன்ற இடங்களில் இருந்து ஜின்னிங் ஆலை அதிபர்கள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்றனர். அதில் ஆர்.சி.எச்., பருத்தி ரகம் 3,200 ரூபாய் முதல் 3,629 ரூபாய் வரையிலும், டி.சி.எச்., பருத்தி ரகம் 4,560 ரூபாய் முதல் 4,714 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.9 லட்சத்திற்கு அதிகமாக ஏலம் போனது.

எதிர்பார்த்த அளவிற்கு பருத்தி வரத்து இல்லாததால் ஏலத்தில் பங்கேற்ற வியாபாரிகள் ஏமாற்றம் அடைந்தனர். சென்ற ஆண்டு இம்மாதம் 2,000க்கும் அதிகமான மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வந்த நிலையில், தற்போது 892 மூட்டைகள் மட்டுமே விற்பனைக்கு வந்தது. பருத்தி விவசாயிகள் சிலர் கூறுகையில், ""போதிய மழையின்மை மற்றும் விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை காரணமாக விளைச்சல் இல்லை.

குறைந்த அளவு தண்ணீரில் மானாவாரி பயிராக பருத்தி பயிரிடப்படுகிறது. ஆறு மாத விளைச்சலுக்கு பிறகு பருத்தி பறிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. மானாவாரி பயிருக்கே மழை இல்லை என்றால் பணப்பயிர்களான நெல், வாழை, கரும்பு, உள்ளிட்ட பல்வேறு பயிர் செய்த விவசாயிகளின் நிலைமை இதை வைத்தே தெரிந்து கொள்ளலாம்.

பருத்தி நன்கு வளர்ந்து பறிக்கப்படும் நிலை வந்த பிறகு பருத்தியை பறிப்பதற்கு கடுமையான ஆள் பற்றாக்குறை நிலவியதால், மானாவாரி நிலத்தில் கூட பருத்தியை பயிர் செய்ய விவசாயிகள் முன் வரவில்லை. இதுவே பருத்தி வரத்து வெகுவாக குறைந்தற்கு காரணம்'', என்றனர்.

## மா மரங்களில் பூ பூக்கும் சீஸன் துவக்கம்

நாமக்கல்: கொல்லிமலை அடிவாரம், சுற்றுவட்டாரத்தில் உள்ள மாந்தோப்புகளில் பூ பூக்கும் சீஸன் துவங்கியுள்ளது. கடும் பனிப்பொழிவு காரணமாக உற்பத்தி குறைய வாய்ப்புள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்துக்கு உட்பட்ட கொல்லிமலை அடிவாரம், சேந்தமங்கலம், காரவள்ளி மற்றும் எருமப்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டாரத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பில், பல வகையான மா மரங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. கிளி மூக்கு மாங்காய் உட்பட பல்வேறு ரக மாம்பழங்கள் மேற்குறிப்பிட்ட பகுதியில் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தாண்டு மாந்தோப்புகளில் பூ பூக்கும் சீஸன் துவங்கியுள்ளது. வரும் மாதங்களில் மா மரங்களில் காய்பிடிப்பு ஏற்படும். இது பற்றி சேந்தமங்கலம் பகுதி விவசாயிகள் கூறுகையில், ""ஆண்டுதோறும் ஃபிப்ரவரி மாதத்தில் மா மரத்தில் பூ பூக்கும் சீஸன் துவங்கும். பின் அடுத்தடுத்த மாதங்களில் காய்பிடிப்பு ஏற்பட்டு ஏப்ரல் மாதத்தில் அறுவடைக்கு தயாராகும். இந்தாண்டு கடும் பனிப்பொழிவு இருந்ததால் மா உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது", என்றனர்.

## கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு பருத்தி வரத்து குறைவு: வியாபாரிகள் கடும் அதிருப்தி

ராசிபுரம்: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனைச் சங்கத்திற்கு பருத்தி மூட்டைகள் குறைவாக வந்ததால், ஏலத்தில் பங்கேற்ற வெளிமாவட்ட வியாபாரிகள் பலர் கடும் அதிருப்தியடைந்தனர். ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பருத்தி, மஞ்சள், கடலை உள்ளிட்ட விளைபொருட்களை விற்பனைக்கு கொண்டு வருவர்.

மேற்குறிப்பிட்ட விளைபொருட்களுக்கு குறிப்பிட்ட தினத்தில் ஏலம் நடக்கும். அதன்படி ராசிபுரம் வேளாண் விற்பனைச் சங்கத்துக்கு ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, பட்டணம், சீராப்பள்ளி, வேலம் பாளையம், கதிராநல்லூர், உள்ளிட்ட சுற்று வட்டாரத்தில் உற்பத்தி செய்யப்படும் பருத்தி விற்பனைக்கு கொண்டுவரப்பட்டது. அதில் ஆடிப்பட்ட மானாவாரி பருத்தி ரகங்களான ஆர்.சி.எச், மற்றும் டி.சி.எச்., போன்றவை விற்பனைக்கு குவிக்கப்பட்டிருந்தன.

சேலம், திருப்பூர், கோவை அன்னூர் போன்ற இடங்களில் இருந்து ஜின்னிங் ஆலை அதிபர்கள் மற்றும் வியாபாரிகள் பங்கேற்றனர். அதில் ஆர்.சி.எச்., பருத்தி ரகம் 3,200 ரூபாய் முதல் 3,629 ரூபாய் வரையிலும், டி.சி.எச்., பருத்தி ரகம் 4,560 ரூபாய் முதல் 4,714 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.9 லட்சத்திற்கு அதிகமாக ஏலம் போனது.

எதிர்பார்த்த அளவிற்கு பருத்தி வரத்து இல்லாததால் ஏலத்தில் பங்கேற்ற வியாபாரிகள் ஏமாற்றம் அடைந்தனர். சென்ற ஆண்டு இம்மாதம் 2,000க்கும் அதிகமான மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வந்த நிலையில், தற்போது 892 மூட்டைகள் மட்டுமே விற்பனைக்கு வந்தது. பருத்தி விவசாயிகள் சிலர் கூறுகையில், ""போதிய மழையின்மை மற்றும் விவசாய கூலியாட்கள் பற்றாக்குறை காரணமாக விளைச்சல் இல்லை.

குறைந்த அளவு தண்ணீரில் மானாவாரி பயிராக பருத்தி பயிரிடப்படுகிறது. ஆறு மாத விளைச்சலுக்கு பிறகு பருத்தி பறிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. மானாவாரி பயிருக்கே மழை இல்லை என்றால்

பணப்பயிர்களான நெல், வாழை, கரும்பு, உள்ளிட்ட பல்வேறு பயிர் செய்த விவசாயிகளின் நிலைமை இதை வைத்தே தெரிந்து கொள்ளலாம்.

பருத்தி நன்கு வளர்ந்து பறிக்கப்படும் நிலை வந்த பிறகு பருத்தியை பறிப்பதற்கு கடுமையான ஆள் பற்றாக்குறை நிலவியதால், மானாவாரி நிலத்தில் கூட பருத்தியை பயிர் செய்ய விவசாயிகள் முன் வரவில்லை. இதுவே பருத்தி வரத்து வெகுவாக குறைந்தற்கு காரணம்", என்றனர்.

### கிராம பயிற்சி கூட்டம்

ஊட்டி, : ஊட்டி அருகேயுள்ள கனாகம்பையில், கிராமப்புற பயிற்சி கூட்டம் நடத்தப்பட்டது. கொய்மலர், தேயிலை, காய்கறி சாகுபடி, திட்டப் பணிகள் மற்றும் மானியம், உரமிடல், பயிர் பாதுகாப்பு, தேயிலை பறித்தல், கவாத்து செய்தல், மண் பரிசோதனை, மண்புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சி, செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. தோட்டக்கலை உதவி இயக்குனர் குணசேகரன், துணை வேளாண்மை அலுவலர் ராஜன், தோட்டக்கலை வணிக வளாகத்தை சேர்ந்த சுகந்தி, உதவி வேளாண் அலுவலர்கள் மோகன், மூர்த்தி, உபாசி பயிற்சியாளர் கணேஷ் பங்கேற்றனர்.

### அரும்பாவூரில் நெல் கொள்முதல் நிலையம் திறக்க கலெக்டருக்கு கோரிக்கை

அரும்பாவூர்:அரும்பாவூரில் விரைவில் அரசு நெல் கொள்முதல் நிலையத்தை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட கலெக்டருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அரும்பாவூர் வட்டார நெல் ஆர்வலர் குழுத்தலைவர் வரதராஜன் கலெக்டர் விஜயகுமாரிடம் அளித்துள்ள கோரிக்கை மனுவில் தெரிவித்திருப்பதாவது, பெரம்பலூர் மாவட்டம்,வேப்பந்தட்டை தாலுகா அரும்பாவூர் பூலாம்பாடி, தழுதாழை, தொண்டமாந்துறை, மலையாளப்பட்டி, கடம்பூர், கவுண்டர்பாளையம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் 2 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு தற்போதுஅறுவடை பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது.அரும்பாவூரில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்கும் அதில் தங்களது நெல்லுக்கு நியாயமான விலை பெறலாம்என இப்பகுதி விவசாயிகள் எதிர்பார்த்திருந்தனர். மேலும் அரும்பாவூரில் விரைவில் அரசு நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என சமீபத்தில் தழுதாழையில் நடந்த மனுநீதி நாள் முகாமில் மாவட்ட கலெக்டர் தெரிவித்தார். ஆனால் இதுவரை அரசு சார்பில் அரும்பாவூரில் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கான எந்த பணிகளும் துவக்கப்படவில்லை. இதனால் இப்பகுதியில் நெல்லை அறுவடை செய்துள்ள விவசாயிகள் தங்களது நெல்லை விற்க முடியாமல் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். மேலும் அரும்பாவூரில் அரசு நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படாததால் வியாபாரிகள் விவசாயிகளிடம் மிகக்குறைந்த விலைக்கு நெல்லை கொள்முதல் செய்கின்றனர். மேலும் நெல் தரம் குறைந்துள்ளது என வியாபாரிகள் வாங்க மறுக்கின்றனர்.இதனால் பல விவசாயிகள் தங்களது நெல்லைஅறுவடைசெய்தும் விற்க வழி தெரியாமல் தவித்து கொண்டுள்ளனர். எனவே இப்பகுதி விவசாயிகளின் நலன் கருதி அரும்பாவூரில் திறப்பதாக அறிவித்த அரசு நெல் கொள்முதல் நிலையத்தை போர்க்கால அடிப்படையில் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

**நெல் கொள்முதல் செய்யும் விவசாயிகளிடம் அடாவடி வசூல் : நாள் ஒன்றுக்கு ரூ.1 லட்சம் வரை வசூல்**

சிவகங்கை:மாவட்டத்தில் நுகர்பொருள் வாணிப கழக குடோனில் நெல் கொள்முதல் செய்யும் விவசாயிகளிடம், கட்டணம் வசூலிப்பதாக புகார் எழுந்துள்ளது.மாவட்டத்தில் நடப்பு பருவத்தில், 85 ஆயிரம் எக்டேரில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பொன்னி ரக நெற்பயிர்களை நடவு செய்திருந்தனர். தை மாத கடைசியில் நெல் அறுவடை துவங்கியுள்ளது.

இங்கு, எக்டேருக்கு 4,000 கிலோ வரை நெல் விளைச்சல் கிடைத்துள்ளது. மாவட்டத்தை சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள், வெளிமார்க்கெட்டில் நெல் விற்பனை செய்கின்றனர்.

தற்போது அரசு, நெல் கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளது. அதன்படி, குவின்டாலுக்கு (100 கிலோ) முதல் தரம் 1,100 ரூபாய், இரண்டாம் தரம் 1,050 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது.
இதனால் நுகர்பொருள் வாணிக கழக குடோனில் நெல்லை விற்க விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளனர்.நாள் ஒன்றுக்கு 700 டன்: சிவகங்கை, காரைக்குடி உள்ளிட்ட ஆறு தாலுகா தலைநகர் உட்பட நெல் விளைச்சல் அதிகமுள்ள கிராமங்களான மறவமங்கலம், சாத்தரசன்கோட்டை, திருப்புவனம், கொந்தகை என 20 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் உள்ளன. இங்கு நாள் ஒன்றுக்கு 600 முதல் 700 டன் வரை நெல் வரத்து இருக்கிறது. ஜன., மற்றும் பிப்., 17ம் தேதி வரை விவசாயிகளிடமிருந்து 66 ஆயிரம் டன் கொள்முதல் செய்துள்ளனர்.விவசாயிகளிடம் ரூ.1.75 லட்சம் வசூல்: முதல் தர நெல்லுக்கு குவிண்டாலுக்கு 1,100 ரூபாயும், இரண்டாம் தரத்திற்கு 1,050 ரூபாய் தரவேண்டும். ஆனால், குடோனில் உள்ள அதிகாரிகள் சிலர், விவசாயிகளுக்கு தரவேண்டிய கொள்முதல் விலையில் இருந்து அலுவலக செலவிற்கென 100 கிலோ கொண்ட மூடைக்கு 25 ரூபாய் வீதம் வசூல் செய்கின்றனர். இந்த தொகை, குடோனிற்கு வரும் நெல்லை சுத்தம் செய்து, மூடை போட்டு குடோனில் அடைக்கும் வரை பணியாற்றும் ஊழியர்களுக்கு தான் அவர்கள் பணம் தருகின்றனர் என "மலுப்பலான' பதிலை தருகின்றனர். இது போன்று, நெல் கொள்முதலுக்காக வரும் விவசாயிகளிடம் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை வசூலிப்பதாக புகார் எழுந்துள்ளது. இதனால், மாவட்டத்தில் நெல் அறுவடை செய்தவிவசாயிகள் பாடுபட்டு விளைவித்த நெல்லை, அரசு அறிவித்துள்ள விலைக்கு கூட விற்க முடியாமல் தவிக்கின்றனர்.

இது குறித்து விவசாய சங்க மாவட்ட செயலாளர் மாணிக்கம் கூறியதாவது: குடோனுக்கு நெல்லை கொண்டு செல்லும் விவசாயிகளிடம், நெல்லை சுத்தம் செய்துதரும் ஊழியர்களுக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு 6 ரூபாய் மட்டுமே வசூலிக்கவேண்டும். ஆனால், கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக விவசாயிகள் தரப்பில் எனக்கு புகார் வந்தது. முறையான கட்டணத்தை மட்டுமே வசூலிக்கவேண்டும் என மாவட்ட கலெக்டரிடம் வலியுறுத்தப்படும்.* சிவகங்கை நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் அய்யாச்சாமி கூறியதாவது:குடோனில் வேலைபார்க்கும் ஊழியர்கள், நெல்லை சுத்தம் செய்துதர விவசாயிகளே அவர்களுக்கு பணம் தருகின்றனர். அலுவலக ஊழியர்கள் யாரும் கட்டணம் கேட்பதில்லை, என்றார்.*லோடுமேன்கள் சங்க மாவட்ட தலைவர் செல்லம் கூறியதாவது: அரசு ஒரு மூடைக்கு 60 பைசா தான் நிர்ணயித்துள்ளது. மூடை ஏற்று, இறக்க, மூடையை தைக்க என பணிச்சுமை அதிகம். இதனால், விவசாயிகளிடம் நிலவரத்தை தெரிவித்து மூடைக்கு (100 கிலோ) 5 ரூபாய் வாங்குகிறோம். நெல்லை தூத்தி, சுத்தம்செய்து தருபவர்கள் 5 ரூபாய் வாங்குகின்றனர். மற்றபடி வசூலிப்பது குறித்து எனக்கு தெரியாது, என்றார்.

## எண்ணெய் வித்து திட்ட பயிற்சி முகாம்

சிங்கம்புணரி :கரிசல்பட்டியில் எண் ணெய் வித்து திட்டம் குறித்த பயிற்சி முகாம் நடந்தது. விவசாய இணை இயக்குனர் சுப்பிரமணியன் தலைமை வகிக்க, துணை இயக்குனர் பழனிச்சாமி முன்னிலை வகித்தார்.
உதவி இயக்குனர் மணிவண்ணன் வரவேற்றார். எஸ்.புதூர் ஒன்றிய தலைவர் ஜெகநாதன் துவக்கிவைத்தார். வட்டார அளவிலான விவசாயிகள் பங்கேற்றனர்.
எண்ணை வித்து பயிர் ஒருங்கிணைந்த சாகுபடி முறையில் விதை, உரம், தண்ணீர், பூச்சி, நோய்கட்டுப்படுத்துதல் பற்றிய செயல் விளக்கம் அளித்தனர். விவசாய அலுவலர் சகாயஜெயக்கொடி, துணை விவசாய அலுவலர் வேலுச்சாமி பங்கேற்றனர்.

## பணப்பயிருக்கு இலைவழி கலப்பு உரம் பயன்படுத்த வேளாண் அதிகாரி யோசனை

மன்னார்குடி: "மன்னார்குடி மற்றும் கோட்டூர் யூனியன் பகுதி விவசாயிகள் பயிரிட்டுள்ள நெல் தரிசில் உளுந்து மற்றும் பயறு சாகுபடி செய்துள்ள இடங்களில் அதிக மகசூல் பெற இலை வழி டி.ஏ.பி., தெளிக்க வேண்டும்' என வேளாண் உதவி இயக்குனர் மயில்வாகணன் யோசனை தெரிவித்துள்ளார். நெல் தரிசில் பயிரிடப்பட்டுள்ள உளுந்து, பாசிப்பயறு போன்ற பயிர்களுக்கு சங்கு கட்டும் தருணத்தில் இலைவழி டி.ஏ.பி., கரைசல் தெளிப்பது அவசியம். பயறு வகைகளுக்கு அடியுரம் இடுவதில்லை. எனவே, தழைச்சத்து மற்றும் மணிச்சத்து உரங்களை இலை வழியாக தருவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம். ஓர் ஏக்கருக்கு நான்கு கிலோ டி.ஏ.பி., தேவைப்படும். ஒரு பிளாஸ்டிக் வாளியில் பத்து லிட்டர் நீரை எடுத்து அதில் நான்கு கிலோ டி.ஏ.பி., இட்டு கரைத்து, முதல் நாள் மாலையில் இருந்து நன்கு ஊர விட வேண்டும். மறுநாள் பிற்பகலில் ஊறவைத்த கரைசலின் மேலாக உள்ள தெளிந்த நீரை மட்டும் தனியே பிரித்து எடுக்க வேண்டும்.வாளியின் அடியில் தங்கும் திடப்பொருட்களை கொட்டிவிட வேண்டும். தெளிந்த நீரை 190 லிட்டர் நீரில் கலந்து முதல்முறை சங்கு கட்டும் தருணத்திலும், மீண்டும் 15 நாட்களுக்குப்பின் இரண்டாம் முறையும் தெளிக்க வேண்டும். இதனால், பூக்கள் மற்றும் காய்களின் எண்ணிக்கை அதிகரித்து மகசூல் அதிகரிக்கும், என தெரிவித்துள்ளார்.

## எகிறி விற்கும் ஏலக்காய் கிலோ 1100க்கு விற்பனை

தேவாரம்:கேரளா, இடுக்கி மாவட்டத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஏலக்காய் சாகுபடி நடக்கிறது. மும்முரமான எடுப்பு நேரத்தில் வண்டன் மேடு, போடியில் உள்ள 8 ஈ-ஆக்சன் சென்டர்களில் வாரத்திற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் கிலோவிற்கு மேல் விற்பனைக்கு பதிவானது. ஏலக்காய் எடுப்பு முடிந்த நிலையில் வாரத்திற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் கிலோ பதிவு செய்யப்பட்டது.

தற்போது வரத்து குறைந்த நிலையில், பண்டிகை காலமும் முடிந்து விட்டது. வெளிநாடுகளுக்கான ஏற்றுமதி ஆர்டர் கணிசமாக உள்ளது. ஏலக்காய் அதிகளவில் பயன் படுத்தப் படும் வட மாநிலங்களிலும் தேவை உள்ளது. ஏலக்காய் விலையில் மாற்றமில்லாமல் விற்பனையாகிறது. நடப்பு வாரத்தில் பல்க் ஆவரேஜ் ரகம் கிலோவிற்கு 950 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரை உள்ளது. பருவட்டு ரகங்களான 7.5 எம்.எம்., மற்றும் 8 எம்.எம்., தரத்திற்கேற்ப 1050 ரூபாய் முதல் 1100 ரூபாய்க்கு விலையில் விற்கப்படுகிறது.

## உப்பிலியபுரத்தில் வேளாண் அதிகாரி ஆய்வு

துறையூர் : உப்பிலியபுரம் வட்டாரத்தில் நடந்து வரும் வேளாண் திட்டப்பணிகளை திருச்சி வேளாண் இணை இயக்குனர்(பொ) ராம்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள துல்லிய பண்ணைய திட்டம், செம்மை நெல் சாகுபடி திட்டம், மண்புழு உரம் தயாரிக்கும் பிரிவு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தப்படுவதை நேரடியாக ஆய்வு செய்து விவசாயிகளுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் கூறி அவர்களது சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

மேலும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயறு மற்றும் எண்ணைய்ப் பயிர்களுக்கு தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள், ஜிப்சம், ஜிங்க்சல்பேட், கூட்டு நுண் சத்து உரங்கள் போன்ற இடுபொருட்கள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுவதாகவும், அதை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும் என கேட்டுக் கொண்டார். ஆய்வின் போது வேளாண் அலுவலர் வேல்முருகன், துணை வேளாண் அலுவலர் ராமராஜ், வேளாண் உதவி அலுவலர்கள் அழகிரிசாமி, செல்வகுமார், லலிதா ஆகியோர் உடனிருந்தனர். செம்மை நெல் சாகுபடி அறுவடை தினவிழா: உப்பிலியபுரத்தை அடுத்த வடக்குப்பட்டியில் நடராஜன் என்பவரது வயலில் ஆத்மா திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள செம்மை நெல் சாகுபடி செயல் விளக்கத்திடலில் அறுவடை விழா நடந்தது. வேளாண் அலுவலர் வேல்முருகன், துணை வேளாண் அலுவலர் ராமராஜ், வேளாண் உதவி அலுவலர்கள் அழகிரிசாமி, செல்வகுமார் ஆகியோர் முன்னிலையில் நடந்த அறுவடையில்; ஒரு ஹெக்டேருக்கு 10ஆயிரத்து140கிலோ மகசூல் எடுக்கப் பட்டது. இவ்விழாவில் அப்பகுதி விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## ஒரே நாளில் 2 கிலோ அரிசி சாப்பிட முடியும் : ஒரு கிலோ உப்பு, மிளகாய் தின்ன முடியுமா? எம்.எல்.ஏ. சிவானந்தம் கேள்வி

ஆரணி : "ஒரு நாளைக்கு 2 கிலோ அரிசி சாப்பிடலாம். ஆனால், ஒரு கிலோ உப்பு, மிளகாய், பருப்பு சாப்பிட முடியுமா?' என்று ஆரணி எம். எல்.ஏ. சிவானந்தம் ஆவேசமாக கேள்வி எழுப்பினார்.

ஆரணி அடுத்த நடுக்குப் பம் உயர்நிலைப்பள்ளியில் மனுநீதி நாள் நடந்தது. நிகழ் ச்சிக்கு, மேற்கு ஆரணி ஒன்றியக்குழு தலைவர் சங் கர் தலைமை வகித்தார். முன் னாள் எம்.எல்.ஏ. தயாநிதி, தி.மு.க. நகர செயலாளர் செல்வரசு முன்னிலை வகித் தனர். தாசில்தார் ராமலிங்கம் வரவேற்றார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் (நிலம்) இஸ்மாயில், 12 பேருக்கு வீட்டுமனை பட்டா, 12 பேருக்கு பட்டா மாறுதல், 20 பேருக்கு முதியோர் உதவித்தொகை, 2 பேருக்கு ரேஷன் கார்டு வழங்கினார்.

நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ. சிவானந்தம் பேசியதாவது: ஆரணி தாலுகா அலுவலகத்தில் தாசில்தார், டி.எஸ். ஓ.வுக்கு கீழ் உள்ள அதிகாரிகள் சரியாக பணிபுரிவதில் லை. அவர்கள் மீது தாசில் தார் நடவடிக்கை எடுக்க வேண்டும். முதல்வர் கருணாநிதி திட்டம் தீட்டினால் அதை அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும். ஆனால், தாலு கா அலுவலகத்தில் அதிகாரிகள் முட்டுக்கட்டையாக இருக்கின்றனர். அரசின் சாதனைகள் குறி த்து கூறினால், எதிர்கட்சிகள் விலைவாசி உயர்ந்துள்ளதே என்று கேள்வி கேட்கின்றனர். நான் கேட்கிறேன். ஒரு நாளைக்கு ஒரு கிலோ மிளகாய், உப்பு, பருப்பு சாப்பிட முடியுமா? ஆனால், அரிசி யை 2 கிலோ கூட சாப்பிடலாம். அதனால்தான் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கப்படுகிறது.

100 நாள் வேலை திட்டத்தை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விலைவாசி உயர்வுக்கு விவசாயிகள்தான் காரணம். பயிர் செய்யும் நிலத்தை விற்று பணத்தை பேங்கில் போட்டு வட்டி வாங்கி சாப்பிடுகின்றனர். இலவச மின் சாரம் வழங்கினால் அதை முறையாக பயன்படுத்தாமல் மின்சார லைனில் "குச்சி'போட்டு விடுவதால், மின் சப்ளை இருக்கும்போது மோட்டார் ஓடும். சப்ளை இல்லையென்றால் "ஆப்' ஆகிவிடும். அந்த அளவுக்கு விவசாயிகள் சோம்பேறிகளாக மாறி விட்டார்கள். விவசாயிகளுக்கு பல சலுகைகளை அளித்து வரும் முதல் வர் படத்தை விவசாயிகள் வீட்டில் மாட்டி வைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில், பஞ்., தலைவர் சுப்பிரமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி நிறைவு

தாராபுரம் : தாராபுரம் உபகோட்டம் வேளாண் பொறியியல் துறை மூலம் பயிர் பாதுகாப்பு கருவிகள் தேர்வு, இயக்குதல், பராமரித்தல், விதை விதைப்பு, நாற்று நடவு இயந்திரங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

அதன் நிறைவு விழாவில், ஈரோடு வேளாண் பட்டதாரிகள் ஆலோசனை மைய இணை செயலாளர் உதயகுமார், தாராபுரம் இந்தியன் அக்ரோ இன்ஜினீயரிங் நிறுவனத்தைச் சேர்ந்த பிரபு, உதவி பொறியாளர் ராஜேந்திரன், உதவி பொறியாளர் சுப்ரமணியன், கோவை வேளாண் பல் கலை பேராசிரியர் செந்தில் குமார், இளநிலை பொறியாளர் பொன்னம்பலம் ஆகியோர் விளக்கினர். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தாராபுரம் உபகோட்ட உதவி செயற் பொறியாளர் முருகேசன் சான்றிதழ் வழங்கினார். பயிற்சி ஒருங்கிணைப் பாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## நெல் கொள்முதல் அதிகரிப்பால், அரிசி விலை குறைகிறது

திருப்பூர் : தமிழகத்தின் டெல்டா மாவட்டங் களில் அறுவடைப்பணி தீவிரமாகி இருப்பதாலும், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து நெல் வரத்து உள்ளதாலும், அரிசி விலை கடந்த இரண்டு மாதமாகவே இறங்கு முகமாகி உள்ளது.

தமிழகத்தில் கிணற்றுப் பாசனத்தை பயன்படுத்தி குறுவை சாகுபடியும், ஆற்றுப்பாசனத்தை பயன்படுத்தி சம்பா சாகுபடியும் செய்யப்படுகிறது. குறிப் பிட்ட சில மாவட்டங்களில் மட்டுமே, குறுவை சாகுபடி நடைபெறுவதால், அப்போது அரசு கொள்முதல் மையங்கள் அமைக்கப்படுவதில்லை. காவிரி ஆற்றில் திறந்து விடப்படும் தண்ணீரை கொண்டு, டெல்டா மாவட் டங்களில் சம்பா சாகுபடி நடைபெறுகிறது. அக்., மாதத்தில் துவங்கும் சம்பா சாகுபடி காலம் ஜன., - பிப்., மாதத்தில் அறுவடை பணியோடு நிறைவுக்கு வரும். இக்கால கட்டத்தில், தஞ்சை, திருவாரூர், நாகை போன்ற டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நெல் அறுவடை மும்முரமாக நடைபெறும்.

எனவே, சம்பா சாகுபடி காலத்தில் அபரிமிதமான நெல் உற்பத்தி இருக்கும்; இவற்றை கொள்முதல் செய்வதற்காக, அரசு தரப்பில் கொள்முதல் மையங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த ஆண்டு சம்பா பருவ துவக்கத்தில், எதிர்பார்த்த அளவு மழை பொழிவு இல்லை. பிறகு, வங்கக்கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக டெல்டா மாவட்டங்களிலும், கடலோர மாவட்டங் களிலும் மழை பெய்தது.இந்த ஆண்டு சம்பா பருவ சாகுபடி தாமதமாக துவங்கியதால், இப்போதுதான் தஞ்சை, திருவாரூர், நாகை, திருச்சி, புதுக் கோட்டை உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் அறுவடை பணிகள் மும் முரமாகி உள்ளது. டெல்டா மாவட்டங் களில் அறுவடைப்பணி தீவிரமாகி

இருப்பதாலும், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து நெல் வரத்து உள்ளதாலும், கடந்த இரண்டு மாதமாக அரிசி விலை குறைந்து வருகிறது.
இதுபற்றி அரிசி ஆலை சங்க தலைவர் துரை கூறியதாவது: திருப்பூரில் பனியன் தொழிலை நம்பி வந்த தென்மாவட்ட மக்களே அதிகம்; தீபாவளிக்கு சொந்த ஊருக்கு சென்றவர் களில் 40 சதவீதம் பேர் திரும்பி வரவில்லை. இதனால், மளிகை கடைகளில் அரிசி விற்பனை மந்தமானது; ஆலைகளில் இருப்பும் அதிகரித்தது. இருப்பு அதிகரித்து, விற்பனை குறைந்ததால், கடந்த இரண்டு மாதங் களுக்கு முன்பே அரிசி விலை குறையத்துவங்கியது. தற்போது, தமிழகத்தில் புது நெல் வரத்து அதிகரித்து இருப்பதாலும், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து நெல் வரத்து இருப்பதாலும், அரிசி விலை குறைந்து வருகிறது. ஒரு குவிண்டால் அரிசிக்கு, 200 ரூபாய் வரை விலை குறைவு ஏற்பட்டுள்ளது, என்றார்.

## காளான் வளர்ப்பு பயிற்சி

பொங்கலூர் : பொங்கலூர் வேலம் பட்டி ஸ்ரீதேவி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், 50 மாணவர்களுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி அளிக்கப் பட்டது.
பயிற்சி நிறைவு விழா, பள்ளி வளாகத்தில் நடந்தது. காளான் வளர்ப்பு பயிற்சி ஆசிரியர் பன்னீர் செல்வம் வரவேற்றார். இன்றைய உலகில் கைத் தொழிலின் முக்கியத்துவம், காளான் வளர்ப்பின் அவசியம் குறித்து தாளாளர் சாமிநாதன் பேசினார். பயிற்சி பெற்ற 50 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. பள்ளி தலைமை ஆசிரியர் ஜேசுராஜா, ஆசிரியர்கள் கோவிந்தசாமி, ரவிச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். ஆறாம் வகுப்பு மாணவி சந்தியா நன்றி கூறினார்.

## தர்பூசணி விலை சரிவு: விவசாயிகள் கவலை

பொங்கலூர் : தர்பூசணி விலையில் சரிவு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர்.
பொங்கலூர் பகுதியில் 100 ஏக்கரில் தர்பூசணி சாகுபடி செய்யப்பட்டிருந்தது. கார்த்திகை, மார்கழி மாதங்களில் விதைப்பு பணி துவங்கப்பட்டு, தை, மாசியில் அறுவடைக்கு வருகிறது. வெயில் சூட்டை தணிக்க மக்கள் விரும்பி உண்பதால், வெயில் காலங்களில்
தர்பூசணிக்கு மவுசு அதிகமாக இருக்கிறது. விவசாயிகள் விற்கும் விலைக்கும், நுகர்வோர் வாங்கும் விலைக்கும் இரண்டு மடங்கு விலை வித்தியாசம் காணப்படுகிறது. நீண்ட நாட்களுக்கு இருப்பு வைத்திருக்க முடியாது என்பதாலும், விரைவில் கெட்டுப்போகும் என்பதாலும் விலை வித்தியாசம் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது.
கடந்தாண்டு வியாபாரிகள் சில்லரை விலையில் கிலோ 14 ரூபாய்க்கு விற்பனை செய்தனர். முதல் தரமான தர்பூசணி காய்களை விவசாயிகளிடம் கிலோ ஆறு ரூபாய் என்ற விலைக்கு கொள்முதல் செய்தனர். ஏக்கருக்கு 10 டன் வரை மகசூல் கிடைத்ததால், விவசாயிகள் நல்ல லாபம் பார்த்தனர். செலவு போக ஏக்கருக்கு 30 முதல் 40 ஆயிரம் வரை லாபம் கிடைத்தது.
இந்தாண்டும் நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் தர்பூசணி சாகுபடி செய்திருந்தனர்.
இந்தாண்டு வெயில் காலம் துவங்கியது முதல் சில நாட்கள் மட்டும் ஐந்து ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்ட தர்பூசணி விலை "கிடுகிடு'வென சரிந்து, இரண்டில் இருந்து மூன்று ரூபாய்க்குள் கொள்முதல் செய்யப்படுகிறது. விலை சரிவு தர்பூசணி சாகுபடி செய்திருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.
இதுபற்றி விவசாயிகள் கூறியதாவது: விதை விலை ஏற்றம், உர விலை ஏற்றம், ஆள் கூலி உயர்வு போன்ற

காரணங்களால் இந்தாண்டு செலவு அதிகம் ஏற்பட்டது; பெரிய காய்களை மட்டுமே வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்; சிறிய காய்களை எடுப்பதில்லை; இதை சந்தைக்கு கொண்டு வந்து அடிமாட்டு விலைக்கு விற்க வேண்டியுள்ளது. மகசூலும் வழக்கத்தை விட குறைந்து, ஏக்கருக்கு ஐந்து டன் மட்டுமே கிடைத்தது; விலையும் குறைந்து விட்டதால், லாபம் எதையும் எதிர்பார்க்க முடியவில்லை; இதை இருப்பு வைத்து விற்க முடியாது என்பதால், கேட்ட விலைக்கு விற்பதை தவிர வேறு வழியில்லை, என்றனர்.

## *தற்காலிகமாகத்தான் நிறுத்தி வைத்துள்ளோம் பி.டி.கத்தரிக்காய்க்கு தடை விதிக்கவில்லை மத்திய மந்திரி ஜெய்ராம் ரமேஷ் சென்னையில் பேட்டி*

*சென்னை, பிப்.18–*

*பி.டி. கத்தரிக்காய்க்கு தடை விதிக்கவில்லை. தற்காலிகமாகத்தான் நிறுத்தி வைத்துள்ளோம் என்று மத்திய மந்திரி ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.*

*தடை விதிக்கவில்லை*

*மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய்க்கு அனுமதி அளிக்க மத்திய அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால், தமிழ்நாடு உள்பட பல மாநிலங்களில் எதிர்ப்பு கிளம்பியதைத் தொடர்ந்து மத்திய அரசாங்கம் பி.டி.கத்தரிக்காய்க்கு அனுமதி இல்லை என்று அண்மையில் அறிவித்தது. இருந்த போதிலும் பி.டி.கத்தரிக்காய்க்கு எதிராக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், விவசாய அமைப்புகள் தொடர்ந்து பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்கள்.*

*இந்த நிலையில், பி.டி. கத்தரிக்காய்க்கு தடை விதிக்கவில்லை என்றும் தற்காலிகமாகத்தான் நிறுத்தி வைத்திருக்கிறோம் என்றும் மத்திய சுற்றுச்சூழல் துறை மந்திரி ஜெய்ராம் ரமேஷ் கூறினார். உயிரி தொழில்நுட்பம், உணவு பாதுகாப்பு, பருவ நிலை மாற்றம் தொடர்பான 3 நாள் சர்வதேச கருத்தரங்க நிறைவு விழா சென்னை தரமணியில் உள்ள எம்.எஸ்.சாமிநாதன் அறக்கட்டளையில் நேற்று நடந்தது. இதில் கலந்து கொண்ட மத்திய மந்திரி ஜெய்ராம் ரமேஷ் நிருபர்களிடம் கூறியதாவது:–*

*எங்கேயும் அறிவிக்கவில்லை*

*மத்திய அரசு பி.டி. கத்தரிக்காய்க்கு முழுமையான தடை ஏதும் விதிக்கவில்லை. தற்காலிகமாகத்தான் அதை நிறுத்தி வைத்துள்ளோம். அனைத்து மாநில முதல்–அமைச்சர்கள், அரசியல் கட்சி தலைவர்கள் விஞ்ஞானிகள் உள்பட அனைத்து தரப்பினரிடமும் ஒத்தக்கருத்து ஏற்பட்ட பின்னரே இந்த விஷயத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும். இது தொடர்பாக விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.*

*ஆனால், பி.டி. கத்தரிக்காய்க்கு தடை விதிப்பதாக நான் எங்கேயும் அறிவிக்கவில்லை. பி.டி. கத்தரிக்காய்க்கு மட்டுமல்ல மரபணு மாற்றம் செய்யப்பட்ட இதர உணவு பொருட்கள் தொடர்பாகவும் ஒத்தக்கருத்து பெறப்படும். இந்த விஷயத்தில் வெளிப்படையாக முடிவு எடுப்போம். விஞ்ஞானிகளின் கருத்துகளை கேட்டறிந்த பிறகே பி.டி. கத்தரிக்காய்க்கு அனுமதி வழங்குவோம். ஒருசில விஞ்ஞானிகள் பி.டி. கத்தரிக்காய்க்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். ஆனால், யாரும் அதற்கு தடை விதிக்க வேண்டும் என்று சொல்லவில்லை.*

*இவ்வாறு மத்திய மந்திரி ஜெய்ராம் கூறினார்.*

## உள்நாட்டில் உற்பத்தி குறைந்ததால் கோகோ இறக்குமதி அதிகரிப்பு

பி கே கிருஷ்ணகுமார்

கொச்சி

உள்நாட்டில் கோகோ உற்பத்தி குறைந்துள்ள நிலையில், இதற்கான பயன்பாடு அதிகரித்து காணப்படுகிறது. இதனால், நடப்பு நிதி ஆண்டில், இதுவரையிலான காலத்தில் கோகோ இறக்குமதி அதிகரித்துள்ளது. சென்ற 2008–09–ஆம் நிதி ஆண்டில் 7,026 டன் கோகோ இறக்குமதி செய்யப்பட்டது. இது, நடப்பு நிதி ஆண்டில் 10,000–15,000 டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சாக்லெட் தயாரிப்பு

சாக்லெட் தயாரிப்பில் கோகோ முக்கிய மூலப்பொருளாக உள்ளது. தேவைப்பாடு உயர்ந்து வரும் நிலையில் சாக்லெட் நிறுவனங்கள் அதிக அளவில் கோகோவை இறக்குமதி செய்து வருகின்றன. சர்வதேச சந்தையில் கோகோ விலை அதிகரித்துள்ள நிலையிலும் இந்த நிறுவனங்கள் கோகோவை தாராளமாக இறக்குமதி செய்து வருகின்றன. இது குறித்து காட்பரி இந்தியா நிறுவனத்தின் செயல் இயக்குனர் ராஜேஷ் கார்க் கூறும்போது, “நிறுவனம் உள்நாட்டில் ஆண்டுதோறும் 8,000 முதல் 10,000 டன் வரை கோகோவை கொள்முதல் செய்கிறது. இதே அளவு கோகோவை வெளிநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்து வருகிறது. இந்தியாவில் கோகோ தாராளமாக கிடைத்தால் நிறுவனத்தின் இறக்குமதி கணிசமாக குறையும்” என்று தெரிவித்தார்.

25 ஆண்டுகளுக்கு பிறகு...

ஜனவரி மாதத்திலிருந்து ஒரு கிலோ கோகோ கொட்டைகளின் விலை ரூ.160 என்ற அளவில் இருந்து வருகிறது. 25 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் இதன் விலை இந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டில் ஒரு கிலோ கோகோவின் விலை ரூ.110–120–ஆக இருந்தது.

தமிழ்நாட்டில் தற்போது கோகோ சாகுபடியில் பல விவசாயிகள் ஆர்வம் காட்ட தொடங்கியுள்ளனர். இதனால் தமிழகத்திலும் கோகோ பயிரிடும் பரப்பளவு அதிகரித்து வருகிறது என அண்மைக் கால புள்ளிவிவரம் ஒன்று தெரிவிக்கிறது.

34,049 ஹெக்டேர்

இந்தியாவில் தற்போது கோகோ சாகுபடி பரப்பளவு 34,049 ஹெக்டேராக உள்ளது. இதில் மேலும் 8,000 ஏக்கர் பரப்பளவை இணைப்பதற்கான நடவடிக்கைகளை முந்திரி மற்றும் கோகோ மேம்பாட்டு இயக்குனரகம் மேற்கொண்டு வருகிறது. பரப்பளவை அதிகரிப்பதில் தமிழ்நாட்டின் பங்களிப்பு அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நம் நாட்டில், கோகோ உற்பத்தியில் கேரள மாநிலம் முதலிடத்தில் உள்ளது. சென்ற ஆண்டில் நாட்டின் கோகோ உற்பத்தி 11,820 டன்னாக இருந்தது. இதில் கேரளாவின் பங்களிப்பு மட்டும் 6,100 டன்னாகும். கோகோ உற்பத்தியில் கேரளாவுக்கு அடுத்தபடியாக கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## நடப்பு ரபி பருவத்தில், மத்திய அரசு 2.40 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ய திட்டம்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

மத்திய அரசு, நடப்பு ரபி பருவத்தில் 2.40 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்ய திட்டமிட்டுள்ளது. நாட்டில் கோதுமை விளையும் பல மாநிலங்களில், கோதுமை அறுவடை இவ்வாண்டு ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரையில் இருக்கும்.

குறைந்தபட்ச ஆதரவு விலை

இது குறித்து மத்திய அரசின் மூத்த அதிகாரி ஒருவர் கூறும்போது, “கடந்த ஆண்டு ரபி பருவத்தில், மத்திய அரசு 2.53 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்திருந்தது. தற்பொழுது, நடப்பு சந்தையில் கோதுமையின் விலை, குறைந்தபட்ச ஆதரவு விலையை விட அதிகமாக உள்ளது. இவ்வாண்டில், ஒரு குவிண்டால் கோதுமையின் விலை ரூ.1,360 என்ற அளவில் உள்ளது. அதேசமயம், கோதுமைக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக மத்திய அரசு ரூ.1,100–ஐ நிர்ணயம் செய்துள்ளது” என்று தெரிவித்தார்.

மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையை விட, நடப்பு சந்தையில் இதன் விலை அதிகமாக உள்ளதால் விவசாயிகள், கோதுமையை மத்திய அரசு அமைப்பான இந்திய உணவு கழகத்திற்கு விற்பனை செய்வார்களா என்ற ஐயப்பாடும் நிலவி வருகிறது.

இருப்பினும், முழு அளவில் கோதுமை அறுவடை மேற்கொள்ளப்பட்டு சந்தைக்கு வரத்து அதிகரிக்கும்போது இதன் விலை குறையலாம் என்ற மதிப்பீடும் உள்ளது. அவ்வாறு விலை குறையும் நிலையில், மத்திய அரசு மேலும் அதிக அளவில் கோதுமையை கொள்முதல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

8.028 கோடி டன்

நடப்பு கோதுமை பருவத்தில், நாட்டின் கோதுமை உற்பத்தி 8.028 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம், கடந்த 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில் இதைக்காட்டிலும் சிறிதளவு கூடுதலாக 8.068 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டது.

## உணவு தேவையை நிறைவு செய்ய மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் இந்தியாவுக்கு அவசியம் தேவை மத்திய விவசாய மந்திரி சரத்பவார் உறுதி

புதுடெல்லி, பிப்.18–

இந்தியாவின் உணவு தேவையை பூர்த்தி செய்வதற்கு மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய், நெல் உள்ளிட்ட பயிர்களை அறிமுகப்படுத்துவது அவசியம் என மத்திய விவசாய மந்திரி சரத்பவார் தெரிவித்துள்ளார்.

பி.டி. கத்தரிக்காய்

இந்தியாவில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக அறிமுகம் செய்வதற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. பூச்சிகளை கொல்லும் சக்தி வாய்ந்தது என்பதால் அந்த கத்தரிக்காயை நோய் தாக்காது. மேலும், அதிக விளைச்சல் கிடைக்கும் என விஞ்ஞானிகளும், பி.டி.கத்தரிக்காய் ஆதரவாளர்களும் கூறுகின்றனர்.

ஆனால், பூச்சிகளை கொல்லும் அளவுக்கு நச்சு தன்மை வாய்ந்த அந்த கத்தரிக்காயால் அதை உண்ணும் மனிதர்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என இயற்கை ஆர்வலர்களும், விவசாயிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கடுமையான எதிர்ப்பு காரணமாக, பி.டி. கத்தரிக்காய் அறிமுகம் செய்வதை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் நிறுத்தி வைத்துள்ளது.

துணை வேந்தர்கள் மாநாடு

பி.டி. கத்தரிக்காயை தொடர்ந்து உருளை கிழங்கு, வெண்டைக்காய், நெல் உள்ளிட்ட வேறு பயிர்களும் மரபணு மாற்றம் செய்யப்பட்டு தயாராக உள்ளன. இந்த சூழ்நிலையில், நாடு முழுவதும் உள்ள விவசாய பல்கலைக்கழக துணைவேந்தர்களின் இரண்டு நாள் மாநாடு டெல்லியில் நேற்று தொடங்கியது.

மாநாட்டை மத்திய விவசாய துறை மந்திரி சரத்பவார் தொடங்கி வைத்து பேசினார். மேலும் நிருபர்களுக்கும் பேட்டி அளித்தார். அப்போது அவர் பேசியதாவது:–

இந்தியாவுக்கு தேவை

நாட்டின் உணவு பாதுகாப்பு பிரச்சினையை தீர்த்து வைக்க நான் விரும்புகிறேன். மக்கள் தொகை இரண்டு மடங்கு அதிகரித்து விட்டது. ஆனால், கூடுதல் விவசாய நிலங்களோ, கூடுதல் நீர்வளமோ கிடையாது. இத்தகைய நிலைமையில், நம்முடைய வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது உள்ளது. எனவே, நவீன அறிவியல் தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம் போன்றவற்றை விவசாயத்தில் அறிமுகம் செய்ய வேண்டும்.

நாட்டின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக மரபணு மாற்றம் செய்யப்பட்ட (பி.டி. வகை) பயிர்களை பயன்படுத்தலாம். மரபணு மாற்றப்பட்ட பயிர்கள், இந்தியாவுக்கு கட்டாயமாக தேவை. எனினும், மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் எடுத்துள்ள முடிவை நாம் மதிக்க வேண்டும். நமக்கு உயரிய வழிகாட்டுதலை அந்த அமைச்சகம் தான் தர முடியும்.

விஞ்ஞானிகளுக்கு வேண்டுகோள்

தற்போதைய முடிவை, நம்முடைய முயற்சிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவாக கருதக் கூடாது. சவால்களை எதிர்கொள்ளுவது அவசியம். வேளாண் துறையில் மாற்று தொழில்நுட்பங்கள் குறைவாக உள்ளன. மரபணு மாற்றப்பட்ட பயிர்களால் உற்பத்தி அதிகரிப்பு, குறைவான உற்பத்தி செலவு, பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு போன்ற பயன்கள் கிடைக்கும்.

கால்நடை தீவன உற்பத்தியில் இது போன்ற தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தபோது எதிர்ப்பு கிளம்பியதை குறிப்பிடலாம். எனவே, மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் குறித்து பொது மக்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள தவறான கருத்தை மாற்ற வேளாண் விஞ்ஞானிகள் முன்வர வேண்டும். முன்பை விட, இரண்டு மடங்கு வேகத்தில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இது தவிர, வேளாண் பல்கலைக்கழகங்களும், ஐ.சி.ஏ.ஆர் அமைப்பும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம். தேசிய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் உள்கட்டமைப்பை அதிகரித்து வலுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு சரத்பவார் தெரிவித்தார்.


சர்க்கரை ஏற்றுமதியா?

உணவு பணவீக்கம் 18 சதவீதத்தை எட்டி இருப்பது குறித்து சரத்பவாரிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த அவர், “ஏப்ரல் மாதத்தில் இருந்து உணவு பொருட்களின் விலை படிப்படியாக குறைய ஆரம்பிக்கும். அந்த சமயத்தில் ‘ராபி’ பருவ அறுவடை தொடங்கி விடும். கோதுமை, அரிசி, சர்க்கரை, பருப்பு வகைகளின் விலை குறையத் தொடங்கியதும் பணவீக்கமும் சரிந்து விடும். ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு 10 ஆயிரம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்தது குறித்து எனக்கு எதுவும் தெரியாது” என்றார். ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு 10 ஆயிரம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய வெளிநாட்டு வர்த்தக இயக்குனர் ஜெனரல் அனுமதி அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாலை மலர் BETA

## ஆரஞ்சுபழத்தில் இருந்து செயற்கை தோல் தயாரிப்பு

புதன்கிழமை, பெப்ரவரி 17, 11:53 AM



சியோல், பிப். 17-

தென் கொரியாவை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆரஞ்சுப்பழம் மற்றும் சிசிலிப்பழம் போன்றவற்றை ஆராய்ச்சி செய்தனர். இதில் இருந்து செயற்கை தோல் மற்றும் அழகு சாதன பொருட்கள் தயாரித்துள்ளனர்.

அவற்றில் இருந்து வெளியாகும் சிட்ரஸ் சீ 623-2 என்ற பாக்டீரியா மூலம் வேதியியல் மாற்றம் செய்யப்பட்டு செலுலஸ் ஜெல் ஆக மாற்றம் செய்யப்படுகிறது. அதில் இருந்து செயற்கை தோல் தயாரிக்கப்படுகிறது.

இது மனிதர்களின் உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. இதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் இந்த செயற்கை தோல் பயன்படுத்துவதால் எந்தவித தொற்று நோயும் ஏற்படாது.

தீக்காயம் பட்ட இடத்தில் ஒரு வருடத்திற்குள் இந்த செயற்கை தோலை பொருத்த முடியும். தற்போது இது ஆய்வில் உள்ளது. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் உபயோகத்துக்கு வரும்.இந்த செயற்கை தோல் இயற்கையான பயோ பாலிமரில் இருந்து தயாரிக்கப்படுகிறது. இதனால் பாக்டீரியா வினால் பாதிப்பு எதுவும் ஏற்படாது என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## கொடைக்கானல் பகுதியில் ஆரஞ்சு பழங்களை தாக்கும் பூஞ்சான நோய் கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் பேராசிரியர்கள் விளக்கம்

புதன்கிழமை, பெப்ரவரி 17, 3:43 PM

பெரும்பாறை, பிப். 17-

திண்டுக்கல் மாவட்டம் தடியன்குடிசை, பெரும் பாறை, மங்களம்கொம்பு, தாண்டிக்குடி, பண்ணைக் காடு, பூலத்தூர், குப்பம்மாள் பட்டி, கே.சி.பட்டி, பெரியூர், பாச்சலூர் போன்ற கீழ் பழனி மலைப்பகுதியில் அதிகமானோர் தற்போது ஆரஞ்சு பயிரிடப்பட்டு விவசாயம் செய்து வரு கின்றனர். ஆனால் ஆரஞ்சு பயிர்களில் ஒரு வித பூஞ்சான நோய் காணப்படுகிறது.

இந்நோய் குறித்து தடியன் குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் கண்ணன், இணை பேராசிரியர் ஆனந்தன் கூறியதாவது:-

இப்பகுதியில் ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை யிலான காலத்தில் ஆரஞ்சு பயிர்களில் அதிகமாக பூஞ்சான நோய் காணப்படும். நோய் தாக்கிய பாகங்களின் மேல் வெண்மை அல்லது சாம்பல் நிறத்தில் பொடி தூவியதைப் போன்ற தோற்றத்தில் பூசண வளர்ச்சி தென்படும் தளிர் இலைகள் மற்றும் கிளை பகுதிகளில் அதிகம் தாக்கும். தாக்கப்பட்ட தளிர் இலைகளும் பூ பாகங்களும் கருகி காய்ந்துவிடும்.

பின்பு பிஞ்சுக்காய்கள் தோன்றினாலும் அவை விரைவில் உதிர்ந்து அதிக மகசூல் இழப்பை ஏற் படுத்துகின்றது. இந்நோய் பெரும்பாலும் காற்றில் பரவுகின்றன. நல்ல ஈரப்பதமும், மிதமான பகல் நேர வெப்ப நிலையும் குளிர்ந்த இரவு வேளைகளும் காணப்படும் காலங்களில் நோய் வேகமாக பரவும்.

நோய் அறிகுறி தென்படும் கிளைகளை வெட்டி அதை எரித்துவிட வேண்டும். கந்தகத்தால் 10 கிலோ ஏக்கர் அல்லது நனையும் கந்தகம் 2 கிராம் 1 லிட்டர் தண்ணீர் கலந்து இளம் தளிர் இலைகள் மற்றும் கிளைகளின் மேல் நன்கு படும்படி தெளிக்க வேண்டும். இம்முறையை 15 நாள் இடைவெளியில் 2 முறை செய்ய வேண்டும்.

### சிவகிரியில் நவீன நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும்: கொங்கு நாடு முன்னேற்ற கழகம் வலியுறுத்தல்

புதன்கிழமை, பெப்ரவரி 17, 5:16 PM

சிவகிரி, பிப்.17-

கொங்குநாடு முன்னேற்ற கழக தலைமை நிலைய செயலாளர் சூர்யமூர்த்தி ஈரோடு மாவட்ட கலெக்டர் சுடலைகண்ணனுக்கு ஒரு மனு கொடுத்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

ஈரோடு மாவட்டத்தில் நெல் கொள்முதல் ஆமை வேகத்தில் நடக் கிறது. நெல்வரத்து அதிகமான நிலையில் கொள்முதல் மிகவும் மந்தமாக உள்ளது. ஆகவே விவசாயிகள் பெரிதும் சிரமப்படுகின் றனர்.

சிவகிரியில் 1 யூனிட் கொள்முதல் நிலையம் உள்ளது. இதன் மூலம் உடனுக்குடன் நெல் கொள்முதல் செய்ய முடியவில்லை.ஆகவே கொடுமுடியில் இருப்பது போல இங்கு 2 யூனிட் கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.